# வண்ணாரப்பேட்டை-திருவொற்றியூர் மெட்ரோ ரயில் திட்டம்: பாதுகாப்பு ஆணையர் இன்று முதல் ஆய்வு

சென்னை, பிப். 4: சென்னை மெட்ரோ ரயில் முதல்கட்ட விரிவாக்க திட்டத்தில், வண்ணாரப்பேட்டை-திருவொற்றியூர் விம்கோ நகர் இடையேயான வழித்தடத்தில், பாதுகாப்பு ஆணையர் வெள்ளிக்கிழமை முதல் 3 நாள்களுக்கு ஆய்வு நடத்தவுள்ளார்.

வண்ணாரப்பேட்டை-திருவொற்றியூர் இடையே முதல் கட்ட மெட்ரோ ரயில் விரிவாக்க திட்டப் பணிகள் ரூ.3,770 கோடியில் நடைபெற்று வருகின்றன. மொத்தம் 9.051 கி.மீ. தொலைவுள்ள இந்த வழித்தடத்தில் சர் தியாகராயர் கல்லூரி, கொருக்குப்பேட்டை, தண்டையார்பேட்டை, சுங்கச்சாவடி, தாங்கல், கௌரி ஆசிரமம், திருவொற்றியூர், விம்கோநகர் ஆகிய 8 மெட்ரோ ரயில் நிலையங்கள் இடம்பெறுகின்றன.

கட்டுமான பணிகள் டிசம்பரில் நிறைவடைந்ததை தொடர்ந்து, இந்தத் தடத்தில் மெட்ரோ ரயில்களை இயக்கி சோதனை ஓட்டம் நடைபெற்றது. இதன்பிறகு, எஞ்சிய பணிகள் நடைபெற்று வந்தன. தற்போது இந்தப்பணிகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளன.

இந்நிலையில், இந்த வழித்தடத்தில் வெள்ளிக்கிழமை முதல் 3 நாள்களுக்கு பாதுகாப்பு ஆணையர் ஆய்வு செய்ய உள்ளார். பாதுகாப்பு ஆணையர் தலைமையிலான குழுவினர் இந்த வழித்தடத்தில் ரயில் இயக்கப்படும்போது, ஒவ்வொரு பகுதியிலும் அதன் வேகத்தையும் சிக்னல் முறை சரியாக இருக்கிறதா என்றும் ஆய்வு மேற்கொள்வார்கள். ரயில் புறப்படும்போது, ரயிலுக்கும் நிலையத்துக்கும் இடையே சிக்னல் தொடர்பும், ரயிலுக்கும் கட்டுப்பாட்டு அறைக்கும் இடையே சிக்னல் தொடர்பும் சரியாக இருக்கிறா என்று ஆய்வு செய்வார்கள். தொடர்ந்து, மெட்ரோ ரயில் நிலையங்களில் பயணிகளுக்கு செய்யப்பட்டுள்ள வசதிகள், பயணச்சீட்டு பெறும் வசதி, மின் தூக்கி, நகரும் படிக்கட்டு வசதி உள்ளிட்டவற்றை ஆய்வு செய்வார்கள்.

இது குறித்து மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறியது: ரயில்வே பாதுகாப்பு ஆணையர் தலைமையிலான குழுவினர் மூன்று நாள்களுக்கு ஆய்வு நடத்தி, மெட்ரோ ரயிலை இயக்குவதற்கான ஒப்புதலை அளிப்பார்கள். அதன்பிறகு, தமிழக அரசிடம் முறையாக அறிவித்து, மெட்ரோ ரயில் சேவை மக்களின் பயன்பாட்டுக்கு திறக்கப்படும். பிப்ரவரி 14-ஆம் தேதி மெட்ரோ ரயில் சேவை தொடங்குவதற்கான வாய்ப்பு உள்ளது என்றனர்.